# விழுப்புரம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023 – 2024

<u>நிர்வாக அறிக்கை</u>

<u>2023 – 2024</u>

**1. அமைப்பும் மேலாண்மையும்:–**

**1.1 அமைப்பு**

இவ்வறிக்கை இந்நகராட்சியின் 102–வது ஆட்சி அறிக்கையாகும்.

தமிழகத்தின் தலைநகரிலிருந்து 160 கி.மீ. தொலைவிலும், கடல் மட்டத்திலிருந்து 43 மீட்டர் உயரத்தில் அமையப் பெற்றுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 33.13 சதுர கிலோ மீட்டர்.

**<u>விழுப்புரம் நகராட்சி சிறப்பு நிலை விபரம் பின்வருமாறு</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | தல மற்றும் நகராட்சித் துறை அரசாணை எண்.1194, நாள் 11–05–1919 | 01–10–1919 | மூன்றாம் நிலை |
| 2. | அரசாணை எண்.265, நாள் 01–04–1953 | 01–10–1953 | இரண்டாம் நிலை |
| 3. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு குறிப்பாணை | 01–04–1973 | முதல் நிலை |
| 4. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.15, நாள்.02–03–1988 | 02–03–1988 | தேர்வு நிலை |
| 5. | அரசாணை (நிலை) எண்.57, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள். 02–05–2023 | 02–05–2023 | சிறப்பு நிலை |

**<u>1–2 ஆட்சி எல்லை</u>**

இந்நகராட்சி எல்லையில் கீழ்க்கண்ட வருவாய் கிராமங்கள்அடங்கியுள்ளன.

1. பூந்தோட்டம்
2. வி.மருதூர்
3. கீழ்பெரும்பாக்கம்
4. பாணாம்பட்டு
5. மகாராஜபுரம்
6. விழுப்புரம்
7. காகுப்பம்
8. சாலாமேடு
9. எருமணந்தாங்கல்
10. வழுதரெட்டி

அறிக்கை ஆண்டில் நகரின் எல்லையில் மாற்றம் ஏதுமில்லை.

**<u>1–3 மக்கள் தொகை</u>**

| மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள் தொகை |
|---|---|
| 1981 | 77,092 |
| 1991 | 88,783 |
| 2001 | 95,455 |
| 2009 (Mid year) | 1,10,000 |
| 2011 | 1,41,162 |

## 2. நகராட்சி நிர்வாகம்

### 2.1. நகர்மன்ற தலைவர்

திருமதி.பி.தமிழ்ச்செல்வி, எம்.பி.ஏ., அவர்கள் 01.04.2023 தேதி முதல் அறிக்கை ஆண்டு முடிய நகர்மன்ற தலைவராக செயலாற்றி வருகிறார்.

### 2.2. நகர்மன்ற துணை தலைவர்

அறிக்கை ஆண்டில் 01.04.2023 தேதி முதல் திரு.சித்திக் அலி. எஸ் அறிக்கை ஆண்டு முடிய நகர்மன்ற துணைத்தலைவராக செயலாற்றி வருகிறார்.

**19.02.2022 தேர்தலில் வெற்றி பெற்ற நகர்மன்ற உறுப்பினர் தேர்தலில் கீழ்கண்ட உறுப்பினர்கள் 02.03.2022 முதல் நகர்மன்ற உறுப்பினர்களாக பதவி வகித்து வருகிறார்கள்.**

| வார்டு எண். | வெற்றிபெற்ற உறுப்பினர் பெயர் | வெற்றி பெற்ற உறுப்பினர் கட்சி விவரம் |
|---|---|---|
| 1 | சேகர். க | அ.இ.அ.தி.மு.க. |
| 2 | அன்சர் அலி சா | தி.மு.க. |
| 3 | திருமதி கோமதி பா | தி.மு.க. |
| 4 | திருமதி அமுதா ஆ | சுயேச்சை |
| 5 | நெடுஞ்செழியன் ந | தி.மு.க. |
| 6 | திருமதி மகாலட்சமி வை | தி.மு.க. |
| 7 | திருமதி கன்னிகா வெ | தி.மு.க. |
| 8 | திருமதி பத்மாவதி நா | அ.இ.அ.தி.மு.க. |
| 9 | திருமதி ராதிகா கு. | தி.மு.க. |
| 10 | திருமதி பிரேமா மு | தி.மு.க. |
| 11 | திருமதி உஷாராணி மோ | தி.மு.க. |
| 12 | பத்மநாபன் ஜெ | தி.மு.க. |
| 13 | திருமதி நவநீதம் ம | தி.மு.க. |
| 14 | சித்திக் அலி எஸ் | தி.மு.க. |
| 15 | திருமதி மகிமை பிரிஜித் பிரியா பி | தி.மு.க. |
| 16 | திருமதி மெரினா ச | தி.மு.க. |
| 17 | திருமதி ஜெயந்தி ம | தி.மு.க. |
| 18 | திருமதி சசிரேகா பி | தி.மு.க. |
| 19 | திருமதி வசந்தா அ | தி.மு.க. |
| 20 | திருமதி ஸ்ரீ தேவி சு | தி.மு.க. |
| 21 | திருமதி தீபா ச | தி.மு.க. |
| 22 | ரியாஸ் அகமது எஸ் | தி.மு.க. |

| | | |
|---|---|---|
| 23 | கோதண்டராமன் அ | அ.இ.அ.தி.மு.க. |
| 24 | மணி பு | தி.மு.க. |
| 25 | அமிர்தராஜ் செ | தி.மு.க. |
| 26 | திருமதி ஜெயபிரியா ச | அ.இ.அ.தி.மு.க. |
| 27 | முகமது இம்ரான்கான் யா | காங்கிரஸ் |
| 28 | பழனிவேலு வ | சுயேச்சை |
| 29 | திருமதி தமிழ்ச் செல்வி பி | தி.மு.க. |
| 30 | திருமதி சத்யவதி வீ | தி.மு.க. |
| 31 | சங்கர் கு | தி.மு.க. |
| 32 | திருமதி வித்திய சங்கரி பெ | சுயேச்சை |
| 33 | திருமதி காவியா கா | பா.ம.க. |
| 34 | கல்யாணசுந்தரம் ரா | அ.இ.அ.தி.மு.க. |
| 35 | செல்வம் வ | அ.இ.அ.தி.மு.க. |
| 36 | மணவாளன் ரா | தி.மு.க. |
| 37 | இளந்திரையன் ம | பா.ம.க. |
| 38 | சிவக்குமார் ந | தி.மு.க. |
| 39 | புருஷோத்தமன் வெ | தி.மு.க. |
| 40 | திருமதிஜனனி ஜா. | தி.மு.க. |
| 41 | சாந்தராஜ் எ எஸ் | சுயேச்சை |
| 42 | சுரேஷ்ராம் சி | காங்கிரஸ் |

3. தேர்தல்கள் :-

| வ . எண் | ஒதுக்கீட்டின் விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெண்களுக்கு பொதுவாக ஒதுக்கப்பட்டது | 18 |
| 2 | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது | 3 |
| 3 | தாழ்த்தப்பட்டவர்களுக்கு பொது ஒதுக்கப்பட்டது | 3 |
| 4 | பொது ஒதுக்கீடு | 18 |
| **மொத்தம்** | | **42** |

**நகராட்சி விரிவாக்கத்தில் சாலாமேடு, காகுப்பம், எருமணந்தாங்கல், வழுதரெட்டி மற்றும் பாணாம்பட்டு ஆகிய 5 கிராம பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டு 42**

வார்டுகளாக பிரித்து கீழ்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்து ஆணைகள் பெறப்பட்டு அதற்கு தக்கவாறு 19.02.2022 –இல் நகரமன்ற தேர் நடைபெற்றது.

1. நகர்மன்ற தலைவர் – பொது (பெண்கள்)
2. தாழ்த்தப்பட்ட பிரிவினர் – பொது – ஒதுக்கப்பட்ட வார்டுகள்–25,34,42– மொத்தம் –3
3. தாழ்த்தப்பட்ட பிரிவினர் –ஒதுக்கப்பட்ட வார்டுகள் –பெண்கள் –13 ,19, 32– மொத்தம்–3
4. பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகள் –3,4,6,7,8,9,10,11, 15, 16, 17, 18, 20, 21, 26, 30, 33, 40 – மொத்தம்–18
5. பொது வார்டுகள் –1,2,5,12,14,22,23,24,27,28,29,31,35,36,37,38,39,40 மொத்தம்–18

## 2. நகராட்சி நிர்வாகம்

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) அரசாணை எண்.146, நாள்.24–10–2016–ன்படி கீழ்காணும் அலுவலர்கள் தனி அலுவலராக இந்நகராட்சியில் பணியாற்றி உள்ளார்கள்.

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | பதவி / தனி அலுவலர் | வருடம் |
|---|---|---|---|
| 1. | அ.வ.சையத் முஸ்தபா கமால், பி.எஸ்.சி, | மேலாளர் மற்றும் ஆணையாளர் (பொ) | 25.10.2016 முதல் 05.01.2017 வரை |
| 2. | டாக்டர் எஸ்.ராஜா, எம்.டி | நகர்நல அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) | 18.01.2017 முதல் 24.12.2017 வரை |
| 3. | ஒய்.சுரேந்திரன், பி.இ. | உதவி செயற்பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) | 24.02.2017 முதல் 23.05.2017 வரை |
| 4. | க.செந்திவேல், பி.ஏ., | ஆணையாளர் | 24.05.2017 முதல் 31.05.2019 வரை |
| 5. | டாக்டர் எஸ்.ராஜா, எம்.டி | நகர்நல அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) | 01.06.2018 முதல் 31.08.2018 வரை |
| 6. | எஸ்.லட்சுமி, எம்.காம்., | ஆணையாளர் | 31.08.2018 முதல் 14.11.2019 வரை |
| 7. | பி.ஜோதிமணி, பி.இ., | நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) | 15.11.2019 முதல் 21.11.2019 வரை |
| 8. | ந.தட்சணாமூர்த்தி, பி.காம்., | ஆணையாளர் | 22.11.2019 முதல் 20.07.2021 வரை |
| 9. | போ.வி.சுரேந்திர ஷா, பி.ஏ., | ஆணையாளர் | 20.07.2021 முதல் 01.03.2022 வரை |

## 4. மன்றக் கூட்டங்கள் :–

2023-2024 அறிக்கை ஆண்டில் 2 சாதாரணக் கூட்டங்களும் 4 அவசரக் கூட்டங்களும் ஆக மொத்தம் 6 கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டங்களின் அலுவல்கள் முறையாக நடைபெற்றன. 539 பொருள்கள் வைக்கப்பட்டு அனைத்துப் பொருள்களும் சுமுகமாக முடிவு செய்யப்பட்டது.

## 5. நிர்வாக செயல்பாடுகள்:-

### 5-1 அறிக்கை ஆண்டில் பணிபுரிந்த ஆணையர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | போ.வி.சுரேந்திர ஷா,<br>ஆணையாளர் | 01-04-2023 முதல் 25.06.2023 வரை |
| 2. | H.இரமேஷ்,<br>ஆணையாளர் | 25.06.2023 முதல் 31.03.2024 வரை |

### 5-2 நகர்நல அலுவலர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | ஆர்.மதன்குமார்,<br>துப்புரவு ஆய்வர் (ம) நகர் நல அலுவலர்(பொ) | 01.04.2023 முதல் 03.07.2023 வரை |
| 2. | D.சக்திவேல்,<br>துப்புரவு அலுவலர் (ம) நகர் நல அலுவலர்(பொ) | 03.07.2023 முதல் 10.10.2023 வரை |
| 3. | Dr.ஸ்ரீபிரியா,<br>நகர்நல அலுவலர் | 10.10.2023 முதல் 31.03.2024 வரை |

### 5-3 துப்புரவு அலுவலர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | D.சக்திவேல்,<br>துப்புரவு அலுவலர் | 03.07.2023 முதல் 31.03.2024 வரை |

### 5-4 துப்புரவு ஆய்வர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | ஆர்.மதன்குமார்,<br>துப்புரவு ஆய்வர் | 01.04.2023 முதல் 31.03.2024 வரை |

### 5-5 நகராட்சி பொறியர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | கே.சாந்தி, நகரமைப்பு அலுவலர் மற்றும் பொறியாளர் (பொ) | 01.04.2023 முதல் 01.08.2023 வரை |
| 2. | கே.மாலதி, நகராட்சி பொறியாளர் மற்றும் செயற்பொறிளார். | 01.08.2023 முதல் 31.03.2024 முடிய |

## 5-6 நகராட்சி உதவி பொறியர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | எஸ். ராபர்ட்கிளைவ் உதவி பொறியாளர் | 01-04-2023 முதல் 31-03-2024 வரை |
| 2. | A.வள்ளி, உதவி பொறியாளர் | 16.08.2023 முதல் 31.03.2024 வரை |

## 5-7 பணி ஆய்வர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | திரு.சு.ஹரிஹரன், பணி ஆய்வர் | 01-04-2023 முதல் 31-03-2024 வரை |

## 5-8 பொதுப் பணி மேற்பார்வையாளர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | திரு, பி.சரவணன் பொதுப்பணி மேற்பார்வையாளர். | 01-04-2023 முதல் 23.05.2023 வரை |
| 2. | திரு.சு.ஹரிஹரன், பணி ஆய்வர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் (பொ) | 23.05.2023 முதல் 31.03.2024 முடிய |

## 5-9 நகரமைப்பு அலுவலர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | கே.சாந்தி நகரமைப்பு அலுவலர் | 01.04.2023 முதல் 01.08.2023 வரை |
| 2. | கே.மாலதி, நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு திட்டமிடுபவர் (கூடுதல் பொறுப்பு) | 01.08.2023 முதல் 30.08.2023 வரை |
| 3. | எஸ்.இரவிச்சந்திரன், முதுநிலை நகரமைப்பு அலுவலர்/ செயற்பொறியாளர் | 30.08.2023 முதல் 29.02.2024 வரை |
| 4. | கே.பிரேம் ஆனந்த், நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) | 29.02.2024 முதல் 31.03.2024 வரை |

## 5-10 நகரமைப்பு ஆய்வர்

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | திரு.பி.கோகுலகிருஷ்ணன், நகரமைப்பு ஆய்வர் | 01-04-2023 முதல் 18.08.2023 வரை |
| 2. | எஸ். ராபர்ட்கிளைவ் உதவி பொறியாளர் | 18.08.2023 முதல் 23.08.2023 வரை |
| 3. | கே.பிரேம் ஆனந்த், நகரமைப்பு ஆய்வர் | 23.08.2023 முதல் 31.03.2024 வரை |

**5-11 மேலாளர்**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | திரு.ச.கிருஷ்ணராஜன், மேலாளர் | 01.04.2023 முதல் 08.05.2023 வரை |
| 2. | J.ரவி, வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர்(பொ) | 08.05.2023 முதல் 16.06.2023 வரை |
| 3. | G.அசோக்குமார், மேலாளர் | 16.06.2023 முதல் 30.06.2023 வரை |
| 4. | P.முரளிகிருஷ்ணன் இளநிலை உதவியாளர் மற்றும் மேலாளர் (பொ) | 30.06.2023 முதல் 31.03.2024 வரை |

**5-12 வருவாய் அலுவலர்**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | J.இரவி, வருவாய் அலுவலர் | 01.04.2023 முதல் 16.06.2023 வரை |
| 2. | G.அசோக்குமார், மேலாளர் மற்றும் வருவாய் அலுவலர் (பொ) | 16.06.2023 முதல் 30.06.2023 வரை |
| 3. | எஸ்.பாபு வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் (பொ) | 30.06.2023 முதல் 31-03.2024 வரை |

**5-13 வருவாய் ஆய்வர்**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | து.அஞ்சுகம், வருவாய் ஆய்வர் | 01-04-2023 முதல் 31-03-2024 வரை |
| 2. | எஸ்.பாபு, வருவாய் ஆய்வர் | 01-04-2023 முதல் 31-03-2024 வரை |
| 3. | அ.மனோகரன் (சிறப்பு வருவாய் ஆய்வாளர்) | 01-04-2023 முதல் 31-05-2023 வரை |

**5–14 கணக்கர்**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | ப.தனலட்சுமி, கணக்கர் | 01–04–2023 முதல் 05–05–2023 வரை |
| 2. | ப.செந்தில் குமார், உதவியாளர் (ம) கணக்கர்(பொ) | 06–05–2023 முதல் 04–07–2023 வரை |
| 3. | சோமசுந்தரம்.தி, உதவியாளர் (ம) கணக்கர்(பொ) | 05–07–2023 முதல் 31–03–2024 வரை |

**5–15 தகவல் தொழில் நுட்ப பிரிவு**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | பி.டி.சங்கர், புள்ளி விவரக் குறிப்பாளர் (ம) உதவி திட்ட அமைப்பாளர் (கூ.பொ) | 01–04–2023 முதல் 07–07–2023 வரை |
| 2. | கு.பாலமுருகன், உதவி திட்ட அமைப்பாளர் | 07–07–2023 முதல் 31–03–2024 வரை |

**5–16 பொது நிர்வாகம்:– பணியாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மேலாளர் | 1 |
| 2. | கணக்கர் | 1 |
| 3. | உதவியாளர்கள் | 5 |
| 4. | இளநிலை உதவியாளர் | 10 |
| 5. | தட்டச்சர் | 4 (காலியாக) |
| 6. | உதவி கனிணி திட்ட அமைப்பாளர் | 1 |
| 7. | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 |
| 8. | பதிவரை எழுத்தர் | 1 |
| 9. | அலுவலக உதவியாளர்கள் | 4 |
| 10. | இரவு காவலர் | 1 |

**6. நிர்வாக செலவினம்:–**

பொதுப்பணியாளர்கள், வருவாய் உதவியாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஆணையர் அவர்களுக்கு செலுத்தப்படும் பங்குத்தொகை மற்றும் பணியமைப்புச் செலவு அறிக்கை ஆண்டில் ரூ.19,36,02,827/– ஆகும். சென்ற ஆண்டின் செலவு ரூ.17,73,09,986/–.

**7. பழைய அலுவலக கட்டிடம் :–**

நகராட்சி அலுவலகம் பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடில் இயங்கி வந்த இடத்தை விட்டு சென்னை தேசிய நெடுஞ்சாலை மருத்துவமனை சாலையில் நகராட்சிக்கு சொந்தமான பயணிகள் கட்டிடம் (Travellers Bungalow) அமைந்துள்ள இடத்தினை இடித்து விட்டு புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் மேற்காணும்

பழைய நகராட்சி அலுவலகத்தினை டவுன் ஹாலாக மாற்ற அரசிற்கு பரிந்துரை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7(1). புதிய அலுவலக கட்டிடம்:–**

புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடம் ரூ.465.00 லட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை சாலையில் அமைந்துள்ள புதிய கட்டிட அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.04.2022 அன்று திறந்து வைக்கப்பட்டு நகராட்சி அலுவலகம் இயங்கி வருகிறது.

**8. நகராட்சியில் அறிக்கையாண்டின் வரவினம் விவரம் 31.03.2024 வரை**

| வ. எண். | விவரம் | நடப்பு ஆண்டு கேட்பு | நடப்பு ஆண்டு வசூல் |
|---|---|---|---|
| 1. | சொத்துவரி | 1026.54 | 835.63 |
| 2. | காலிமனை வரி | 39.57 | 14.53 |
| 3. | தொழில் வரி | 214.14 | 197.13 |
| 4. | Assigned Revenue | 205.80 | 205.80 |
| 5. | Devolution Fund | 3013.95 | 3013.95 |
| 6. | $14^{th}$ CFC | 613.80 | 613.80 |
| 7. | சேவைக் கட்டணம் மற்றும் இதர வரி (Entertaiment Tax) | 54.92 | 54.92 |
| 8. | பலவகை வரவினம் (Non Tax) | 235.97 | 194.29 |
| 9. | தண்ணீர் கட்டணம் | 69.81 | 22.06 |
| 10. | திடக்கழிவு மேலாண்மை | 96.35 | 66.28 |
| 11. | பாதாள சாக்கடை கட்டணம் | 61.58 | 24.99 |
| | **கூடுதல்** | **5632.43** | **5243.38** |

**9. நகராட்சியில் அறிக்கையாண்டின் செலவினம் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | பொது நிர்வாகம் | தொகை ரூ. |
| | ஊதியம் | 13,86,40,850 |
| 2. | ஓய்வூதிய செலவு | 5,49,61,977 |
| 3. | இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 18,26,99,722 |
| 4. | திட்டச் செலவு | 6,51,646 |
| 5. | நிர்வாக செலவு | 1,52,86,231 |
| 6. | பங்குத்தொகை மற்றும் மான்யம் | 5,20,000 |
| 7. | **வட்டி மற்றும் கடன்** | 1,74,92,702 |
| | **கூடுதல்** | **41,02,53,128** |

**10. அச்சடித்தல் மற்றும் படிவங்கள்:–**

இத்தலைப்பின் கீழ் அறிக்கை ஆண்டில் ரூ25.47 இலட்சம் செலவிடப்பட்டது. சென்ற ஆண்டு செலவினம் ரூ15.00 இலட்சம் ஆகும். நகராட்சியின் பணிகளுக்காக 32 கணினிகள், 13 லேசர் பிரிண்டர்களும், நகல் எடுக்கும் இயந்திரம் 4 மற்றும் டாட் மேட்ரிக் பிரிண்டர்கள் 4 உள்ளது.

**11. பொறியியல் பிரிவு**

| வ. எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பொறியர் | 1 |
| 2. | உதவிப் பொறியாளர் | 2 |
| 3. | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 4. | பணி ஆய்வர் | 1 |
| 5. | மின்னாளர் மின் பணியாளர் (நிலை–1) | 1 |
| 6. | மின் கம்பி உதவியாளர் (தெரு விளக்கு) | 2 |
| 7. | குழாய் பொருத்துநர் | 1 |
| 8. | மின் கம்பியாளர் (தெரு விளக்கு) | 1 |

**11.1. சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள்**

| வ. எண் | சாலைகளின் வகை | சாலைகளின் நீளம் | அறிக்கை ஆண்டில் போடப்பட்ட சாலைகள் (மேம்படுத்துதல் கி. மீட்டரில்) | 31.03.2023–ல் சாலைகளின் நீளம் |
|---|---|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலைகள் | 95.97 | 4.92 | 97.68 |
| 2. | தார் சாலைகள் | 145.20 | 7.66 | 146.76 |
| 3. | பேவர் பிளாக் சாலை | 2.34 | – | 2.34 |
| 3. | கருங்கல் ஜல்லி சாலைகள் | 2.76 | – | 2.76 |
| 4. | மண் சாலைகள் | 29.33 | 2.67 | 26.66 |
| மொத்தம் | | **276.20** | – | **276.20** |

இந்நகராட்சியின் எல்லைக்குள் கீழ்கண்ட இரண்டு சாலைகள் 6.4 கி.மீ. தூசி படியா சாலையினை தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலை
2. பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலை

12. வீட்டுக்கு வீடு குப்பை அள்ளும் திட்டம்

இந்நகரில் திடக்கழிவு மேலாண்மை வீடுதோறும் குப்பைகளை அள்ளும் திட்டத்தின் கீழ் அனைத்து வார்டுகளிலும் மற்றும் BOV (Battery Operator Vehicle) மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பையை பிரித்து வாங்கப்படுகிறது. பொதுமக்களுக்கு நோட்டீஸ் மூலம் வினியோகம் செய்து குப்பைகளை ரோட்டில் கொட்டக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை

இந்நகரில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு தோறும் குப்பைகள் சேகரிக்கும் பணி அனைத்தும் வார்டுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வீடுகள் தோறும் BOV மற்றும் TATA ACE வண்டிகள் மூலம் சேகரிக்கப்படும் கழிவுகள் உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை மற்றும் தொற்று நோய் (டெங்கு, சிக்குன் குன்யா) நோய் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடிய பேரணிகள் அறிக்கையாண்டில் நடத்தப்பட்டுள்ளது.

உரக்கிடங்கு

இந்நகராட்சியின் தற்போதய உரக்கிடங்கு திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் 5.42 ஏக்கர் உள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி ஆகஸ்ட் 2018 மூடப்பட்டு அக்குப்பைகள் அனைத்தும் உரமாக்கும் பணி 3.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. தற்போது நகராட்சி பகுதிகளில் 8 இடங்களில் தலா 52.00 இலட்சம் மதிப்பீட்டில் நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் அமைக்கப்பட்டு கீழ்காணும் விவரப்படி குப்பைகள் உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நுண்ணுர மையங்கள்:–

| வ.எண். | நுண்ணுர மையங்கள் அமைந்துள்ள இடம் | வார்டு எண்கள். |
|---|---|---|
| 1. | அனிச்சம்பாளையம் | 23,24,26,27,30 |
| 2. | எருமணந்தாங்கள் | 5,16,17,18,19,42, |
| 3. | நகராட்சி மைதானம் | 8,9,14,20,21,28,29 |
| 4. | காகுப்பம் | 1,2,3,4,6,7 |
| 5. | மாம்பழப்பட்டு ரோடு | 11,10,13,25,31,33 |
| 6. | அண்ணா நகர் | 15,22,32,34,35,36,37 |
| 7. | எல்லீசத்திரம் | 12 மார்க்கெட் |
| 8. | பொன்னேரி | 38,39,40,41 |

வள மீட்பு மையம் :–

| வ.எண். | வள மீட்பு மையம் | வார்டு எண்கள். |
|---|---|---|
| 1. | அனிச்சம்பாளையம் | 17, 30, 37, 42 |

கழிவறை:–

| வ. எண். | கழிவறை | கழிவறை எண்ணிக்கைகள் | | |
|---|---|---|---|---|
| | | பயன்படுத்துபவை | பயன்படுத்தப்படாதவை | மொத்தம் |
| 1. | பொது கழிவறை | 11 | 0 | 11 |
| 2. | சமுதாய கழிவறை | 21 | 3 | 24 |
| ஆக மொத்தம் | | 32 | 3 | 35 |

******

## மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை

அரசு ஆணை எண்.130–ன்படி 22–09–2012 முதல் நகராட்சி அலோபதி மருந்தகம், சித்தா மருந்தகம் மற்றும் மகப்பேறு நிலையம் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு அரசு கட்டுப்பாட்டில் நகர ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. மேலும், அனைத்து விதமான அரசு நிதியும் நகர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது.

### சந்தைகள், விழாக்களும்

விளம்பரப்படுத்தப்பட்ட சந்தை, விழாவோ கிடையாது. முக்கியமாக கொண்டாடப்படும் திருவிழா திரு.வி.க. சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் லட்சதீப உற்சவ திருவிழா 2023–2024 ஆம் ஆண்டு கோயில் திருப்பணி காரணமாக நடைபெறவில்லை.

### வரியில்லா இனங்கள்

இந்த தலைப்பின் 2023–2024–ஆம் ஆண்டில் வருமானம் பின்வருமாறு :–

| வ. எண். | ஆண்டு | கட்டண கழிவறை வசூல் உரிமம் லட்சத்தில் | பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் மற்றும் வாகனம் நிறுத்துமிடத்தில் லட்சத்தில் | ஆடு, மாடு வதைச் சாலை லட்சத்தில் | தினசரி சந்தை |
|---|---|---|---|---|---|
| 1. | 2023–2024 | 27.87 | 46.53 | 2.55 | 8.61 |

### சந்தைகள் மற்றும் கடைகள்

வாரச் சந்தைகள் கிடையாது. தவிர கீழ்க்குறிப்பிட்ட இடங்களிலுள்ள கடைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

| வ. எண். | தெருக்களின் பெயர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அமராவதி விநாயகர் கோயில் தெரு கடைகள். | 12 |
| 2. | அங்காளம்மன் கோயில் தெரு கடைகள். | 05 |
| 3. | மகாத்மா காந்தி சாலை கடைகள். | 17 |
| 4. | பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலை (கிழக்கு) கடைகள் (கிழக்கு பாண்டி ரோடு) | 12 |
| 5. | பழைய விரைவு பேருந்து நிலையத்தில் கடைகள் (நேரக்காப்பாளர் அறை) | 07 |
| 6. | திரு.வி.க. சாலை கடைகள். | 04 |
| 7. | கீழ்பெரும்பாக்கம் சண்முகப் பெருமான் தெரு கடைகள். | 18 |
| 8. | நகராட்சி மகப்பேறு இல்லத்திற்கு முன்புறம் கடைகள். | 12 |
| 9. | பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலையில் ரயிலடி அருகில் உள்ள தார்சு கடைகள். | 07 |
| 10. | நகராட்சி மருந்தகம் அருகிலுள்ள கடைகள் | 02 |

| | | |
|---|---|---|
| | (கிழக்கு பாண்டி ரோடு) | |
| 11. | பூந்தோட்டம் பள்ளி அருகில் கடைகள். | 04 |
| 12. | கீழ்பெரும்பாக்கம் பஜனை கோவில் தெரு அருகில் உள்ள கடைகள். | 05 |
| 13. | புதிய பேருந்து நிலைய கடைகள் | 81 கடைகள்<br>2 எடை மேடை<br>5 நேரகாப்பாளர் கடை |
| 14. | மண்ணெண்ணை பங்கு | 02 |
| 15. | உழவர் சந்தை | 01 |
| 16. | பூங்கா தெரு | 04 |
| 17. | அய்யனார் குளம் | 36 |
| 18. | பூந்தோட்டம் ஆவின் பாலகம் (பூங்கா) | 01 |
| 19. | பழைய பேருந்து நிலைய வணிக வளாக கடைகள் | 78 |
| | **மொத்தம்** | 320 |

இதன் கீழ் நடப்பு கேட்பு ரூ.158.03 லட்சத்தில் வசூல் ரூ.116.36 ஆகும். இத்தலைப்பின் கீழ் அதிகப்படியான வரவு பொதுக் கணக்கின் கீழ் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

**ஆ. வண்டிப்பேட்டை**

இல்லை

**1. பேருந்து நிலையம்**

புதிய பேருந்து நிலையம் சாலாமேடு கிராமம் பூந்தோட்டம் ஏரி வளாகத்தில் 09-06-2000 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2023-2024-ம் ஆண்டில் கேட்பு பின்வருமாறு.

| ஆண்டு | 176 கடைகள் | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | வாகனம் நிறுத்துமிடம் | கட்டண கழிவறை வசூல் |
|---|---|---|---|---|
| 2023-2024 | 124.98 | 30.38 | 16.15 | 27.87 |

பண்டிட் ஜவஹர்லால்நேரு சாலையில் " பி " வகுப்பைச் சேர்ந்த அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் நகரபேருந்து நிலையமாக தொடர்ந்து இயங்கி வருகிறது.

**ஈ. ஆடு, மாடு அடிக்கும் இடம் :-**

ஒரு ஆடு அடிக்கும் இடம், ஒரு மாடு அடிக்குமிடமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ் கேட்பு மற்றும் வசூல் ரூ.2.55 இலட்சம் ஆகும்.

## <u>உ. அபாயம் மற்றும் அருவருக்கத் தக்க தொழில்கள்</u>

அபாயம் மற்றும் அருவருக்கத் தக்க தொழில்களின் பட்டியலில் வரக்கூடிய அனைத்து தொழில்களுக்கும் துப்புரவு ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டின் கேட்பு, வசூல், நிலுவை விபரம் 2023–2024 கீழ்வருமாறு.

| வருடம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| 2023–2024 | ரூ.2,19,020/- | ரூ.2,19,020/- | இல்லை |

* * * * *

## <u>வருவாய் பிரிவு</u>

வருவாய் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | வருவாய் அலுவலர் | – | 1 |
| 2. | வருவாய் ஆய்வாளர்கள் | – | 2 |
| 3. | வருவாய் உதவியாளர்கள் | – | 12 |

விதிக்கப்படும் வரிகளின் விவரமும் விகிதமும் பின்வருமாறு (ஒரு அரையாண்டிற்கு)

1. சொத்துவரி கட்டிடங்கள் — ஆண்டு மதிப்பின் பேரில்

| | |
|---|---|
| பொது வரி | 5.5 % |
| கல்வி வரி | 2.5 % |
| துப்புரவு வரி | 0.0 % |
| விளக்கு வரி | 0.0 % |
| குடிநீர் மற்றும் வடிகால் வரி | 4.5 % |
| நூலக வரி | 1.0 % |
| கூடுதல் | 13.5 % |

காலிமனை வரி (ஒரு அரையாண்டிற்கு)

| | |
|---|---|
| பொது வரி | 5.5 % |
| கல்வி வரி | 2.5 % |
| துப்புரவு வரி | 0.0 % |
| விளக்கு வரி | 0.0 % |
| குடிநீர் மற்றும் வடிகால் வரி | 4.5 % |
| நூலக வரி | 1.0 % |
| கூடுதல் | 13.5 % |

**<u>சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு – 2022</u>**
**<u>ந.க.எண்.1817/2022/அ1</u>**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022–ல் 01.04.2022 முதல் சொத்து வரி / காலிமனை வரி பொதுசீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ல் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை, சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி விழுப்புரம் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| > = 1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பில் 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவேதற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் , செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள்சந்துகள் போன்றவை ,தெருக்கள் , ,அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும் மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்தும் விழுப்புரம் நகராட்சியின் நகர்மன்ற தீர்மான எண்.27, நாள்.11.04.2022–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு 01.04.2022 முதல் மேற்கொள்ள ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பில் உயர்வு செய்வதற்கான காரணி நிர்ணயம் செய்யப்பட்டதை 13.04.2022ல் தினகரன் நாளிதழிலும், மாலை முரசு நாளிதழிலும் மற்றும் 14.04.2022ல் The Financial Express ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு உயர்வு குறித்து பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அறிவிக்கை வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் (13.04.2022 முதல் 13.05.2022 வரை) எழுத்து பூர்வமாக நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்கலாம் அல்லது நகராட்சி அலுவலக மின்னஞ்சல் commr.villupuram@tn.gov.in என்ற முகவரியில் அனுப்பி வைத்திட பொது சீராய்வு குறித்த அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டது. சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்வதை குறித்து வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் ஒரே ஒரு மனு மட்டுமே பெறப்பட்டது. பெறப்பட்ட மனுவானது பொதுவான கோரிக்கையாக நியாயமான வரி விதிக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு அரசு வழி காட்டுதலின் படி நியாயமான முறையிலியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே மன்றத் தீர்மான எண்.27, நாள்.11.04.2022–ல் கீழ்காணும் விவரப்படி சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள அனுமதித்ததை கீழ்கண்ட விவரப்படி நகர்மன்ற தீர்மான எண்.81 நாள்.20.05.2022–ல் ஊர்ஜிதம் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, விழுப்புரம் நகராட்சியில் கீழ்கண்டவாறு 01.04.2022 முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படும்.

**<u>சொத்து வரி</u>**

| வ.எண். | மண்டலம் | தற்போழுது உள்ள மண்டல மதிப்பு சதுர அடிக்கு ரூ. | RATE OF TAX |
|---|---|---|---|
| 1 | A | 1.10 | 13.5% |
| 2 | B | 0.90 | |
| 3 | C | 0.50 | |
| 4 | D | 0.30 | |

**<u>01.04.2022 முதல் புதிய வரி விதிப்புகளுக்கு உயர்வு செய்யப்படவுள்ள சொத்து வரி மண்டல மதிப்பு</u>**

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 601–1200 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1201–1800 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | 1800 சதுர அடிக்கு மேல் பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவிரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | விணிகப் பயன்பாட்டுக்கு கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரியில் 100% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்பொது உள்ள சொத்துவிரியில் 75% சொத்துவரி உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1.1 | 1.38 | 1.65 | 1.93 | 2.20 | 2.20 | 1.93 |
| B | 0.9 | 1.13 | 1.35 | 1.58 | 1.80 | 1.80 | 1.58 |
| C | 0.5 | 0.63 | 0.75 | 0.88 | 1.00 | 1.00 | 0.88 |
| D | 0.3 | 0.38 | 0.45 | 0.53 | 0.60 | 0.60 | 0.53 |

**காலிமனைவரி மண்டல மதிப்பு**

| மண்டலம் | தற்போதைய மதிப்பீடு (ரூபாய்) | பொது சீராய்வின் படி 100% காலிமனை உயர்வு (1 சதுர அடிக்கு ரூபாய்) |
|---|---|---|
| A | 0.15 | 0.30 |
| B | 0.20 | 0.40 |
| C | 0.30 | 0.60 |
| D | 0.10 | 0.20 |

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழி காட்டுதலின் படி 01.04.2022 தேதி முதல் கீழ்கண்ட வாறு சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்யப்படும்.

   I. 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படும்.
   II. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படும்.
   III. 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படும்.
   IV. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படும்.
   V. வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படும்.
   VI. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படும்..
   VII. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படும்.
   VIII. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்படும்.

2. 01.04.2022 முதல் மேற்கண்டவாறு மண்டல அடிப்படை மதிப்பில் சொத்துவரி / காலிமனை வரி கணக்கீடு செய்து வரி விதிப்பு செய்யப்படும்.

3. 2011–ல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகளில் 'D' மண்டலத்தில் உள்ள இனைப்பு I–ல் காணும் தெருக்களுக்கு A,B,C மற்றும்

D மண்டலம் என திருத்தி அதன் அடிப்படையில் கலம் எண்.4–ல் குறிப்பிடப்பட்டுள்ள மண்டல மதிப்பு நிர்ணயம் செய்து அவ்வினங்களுக்கு சொத்துவரி சீராய்வு செய்யப்படும்.

4. இனைப்பு II–ல் காணும் பட்டியலில் தற்போது வரை மண்டலம் அடிப்படையில் மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுப்பட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றினை தனித்தனி தெருக்களாக, அடிப்படை மண்டலம் மதிப்பு மாறாமல், அதே மண்டல மதிப்பில் சொத்துவரி விதிப்பு பதிவேட்டில் பதிவு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்படும்.

5. 01.04.2022 முதல் விழுப்புரம் நகராட்சியில் புதியதாக சொத்துவரி / காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது திருத்தி அமைக்கப்படும் அனைத்து வகையான கட்டிடங்களும் மன்ற தீர்மானத்தின் வகைப்படுத்தப்பட்டுள்ள மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பில் சொத்துவரி / காலிமனை வரி விதிப்பு செய்யப்படும்.

**<u>தொழில்வரி</u>**

21–05–2018–ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12503/2018/ஆர்1, 01–10–2018 முதல் 2018–2019/IIமுதல் 30%உயர்வு செய்ய உத்திரவிட்டவாறு வசூலிக்கப்படுகிறது.

| வ. எண் | அரையாண்டிற்கான மாத வருமானம் ரூ. | செலுத்த வேண்டிய தொழில் வரி ரூ. |
|---|---|---|
| 1. | 21,000.00 வரை | இல்லை |
| 2. | 21,001 முதல் 30,000 வரை | 155/– |
| 3. | 30,001 முதல் 45,000 வரை | 390/– |
| 4. | 45001 முதல் 60,000 வரை | 765/– |
| 5. | 6001 முதல் 75,000 வரை | 1155/– |
| 6. | 75,001–க்கு மேல் | 1250/– |

நடப்பு மற்றும் நிலுவை வரி இனம், வரியில்லா இனம் ஆகியவைகளின் கீழ் வருவாய் விவரம் வருமாறு :–

| வ. எண் | விவரம் | வரியினம் (ரூ. லட்சத்தில்) | வரியில்லா இனம் (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மொத்த கேட்பு (நிலுவை மற்றும் நடப்பு) | 2061.18 | 900.29 |
| 2. | வசூலானது | 1376.96 | 417.42 |
| 3. | தள்ளுபடி செய்யப்பட்டவை | 0.00 | 0.00 |
| 4. | வசூலாகாத நிலுவை | 684.22 | 482.87 |

**<u>பொது</u>**

இந்த ஆண்டில் பணப்புழக்க விவரம் வருமாறு :–

| வரவு (ரூ. லட்சத்தில்) | செலவு (ரூ. லட்சத்தில்) |
|---|---|
| ரூ.5216.81 | ரூ.3915.49 |

**இயல்பான வருவாய் :–**

அறிக்கையாண்டில் மொத்தம் இயல்பான வரவு ரூ.5216.81 லட்சம் ஆகும். அறிக்கை ஆண்டின் செலவு ரூ.3,915.49 லட்சம் ஆகும். இச்செலவுகள் பொது வருவாயிலிருந்து செய்யப்பட்டது.

**கடன்கள் :–**

அறிக்கையாண்டில் தொடக்கத்தில் நிலுவை நின்ற கடன் தொகை ரூ.116.24 லட்சம் மற்றும் நடப்பாண்டு பெறப்பட்ட கடன் தொகை ரூ.200.00 லட்சம் ஆக மொத்தம் கடன் தொகை 316.24 இலட்சமாகும். அறிக்கையாண்டில் கடனுக்காக அசல் ரூ.162.77 செலுத்தப்பட்டது. ஆண்டு இறுதி கடன் நிலுவை ரூ.153.47 லட்சம் நிலுவையாக உள்ளது.

**கணக்கு தணிக்கை :–**

அறிக்கையாண்டில் 2023–2024–ம் ஆண்டின் கணக்குகள் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறை உதவி இயக்குநரால் தணிக்கை குறிப்பில் நிதி நிலைமை பற்றி கருத்து அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி ஆண்டு முடிவில் தணிக்கை குறிப்பு 18, சாதாரண பத்திகள் 103, சிறப்பு பத்திகள் 110 தணிக்கைத் தடை பத்திகள் நிலுவையில் உள்ளன.

**வழக்குகள் :–**

நகராட்சியால் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளின் புள்ளி விவரங்கள் பின்வருமாறு:–

| விவரம் | நிலுவையின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| முன் ஆண்டுகளில் நிலுவை | 39 | – |
| அறிக்கையாண்டில் தொடரப்பட்டவை | 3 | – |
| மொத்தம் | 42 | – |
| முடிக்கப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 9 | – |
| ஆண்டு இறுதியில் நிலுவை | 36 | 90.56 இலட்சம் |

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் :–**

இந்நகராட்சி பள்ளிகளில் 15–09–1982 முதல் தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. இந்நகராட்சியில் இரு மேல்நிலைப்பள்ளி சத்துணவு மையமும், இரு உயர்நிலைப்பள்ளி சத்துணவு மையமும், 6 நகராட்சி ஆரம்பப்பள்ளி மையங்களும் முறையாக செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் சராசரி நாள் ஒன்றுக்கு வேலை நாட்களில் 3054

மாணவர்கள் சாப்பிட்டு வருகின்றனர். இம்மையங்களில் ஒரு மாணவருக்கு உணவு சமைக்க ஒரு நாளைக்கு 180 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம்**
**பயனாளிகள் எண்ணிக்கை**

| வ. எண் | பள்ளியின் பெயர் | குழந்தைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | ஆண் | மொத்தம் |
| 1 | நகராட்சி ஆரம்பப்பள்ளி பி.என் தோப்பு | 54 | 47 | 101 |
| 2 | நகராட்சி ஆரம்பப்பள்ளி கீழ்பெரும்பாக்கம் | 110 | 125 | 235 |
| 3 | நகராட்சி ஆரம்பப்பள்ளி பூந்தோட்டம் | 149 | 132 | 281 |
| 4 | நகராட்சி ஆரம்பப்பள்ளி மருத்துவமனை சாலை | 156 | 151 | 307 |
| 5 | நகராட்சி ஆரம்பப்பள்ளி காமராஜர் தெரு | 9 | 5 | 14 |
| 6 | நகராட்சி உருது ஆரம்பப்பள்ளி காமராஜர் தெரு | 3 | 7 | 10 |
| 7 | நகராட்சி உயர் நிலைப்பள்ளி, பூந்தோட்டம் | 348 | 222 | 570 |
| 8 | நகராட்சி உயர் நிலைப்பள்ளி, மருத்துவமனை சாலை | 239 | 201 | 440 |
| 9 | நகராட்சி மேல் நிலைப்பள்ளி, பி.என் தோப்பு | 309 | 266 | 575 |
| 10 | திரு.காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி,நவாப் தோப்பு | 252 | 0 | 252 |
| | மொத்தம் | 1629 | 1156 | 2785 |

**ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்**

இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த 6 ஆரம்பப்பள்ளிகள், 2 உயர்நிலைப்பள்ளி மற்றும் 2 மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளை அரசிடம் ஒப்படைக்கப்பட்டு 01-04-1990 முதல் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குரிய ஊதியம் அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இம்மையங்களில் மொத்தம் 18 பணியாளர்கள் கீழ்கண்டவாறு பணி புரிந்து வருகின்றனர்.

1. மைய பொறுப்பாளர்கள் – 8
2. சமையலர்கள் – 8
3. உதவியாளர்கள் – 2

சமூக நலத்துறை அரசு ஆணை எண்.234, நாள்.01-06-2009-ன்படி 01-01-2006 முதல் பொறுப்பாளருக்கு ரூ.2500-5000-500GP சமையலர்களுக்கு ரூ.1300-3000+300

GP மற்றும் சமையல் உதவியாளருக்கு ரூ.950–2000+200 GP என்னும் ஊதிய விகிதத்தில் ஊதியம், திருத்தி அமைக்கப்படுகிறது.

இப்பணியாளர்கள் மற்றும் மையங்கள் சம்பந்தப்பட்ட பொருள் குறித்த அலுவலகப் பணிகளை கவனிக்க நகராட்சி அலுவலகத்தில் உதவியாளர் மற்றும் கணக்கர் என்னும் பதவியில் உதவியாளர் நியமனம் செய்யப்பட்டு, மேற்படி பணிகளை கவனித்து வருகின்றனர்.

இப்பள்ளி சத்துணவு மையங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், உப்பு ஆகிய உணவு பொருட்கள் விழுப்புரம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பிரதி மாதம் 10–ம் தேதி அந்தந்த மையங்களில் தேவைக்கேற்ப நேரிடையாக வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவு மையங்கள் யாவும் புகார் ஏதுமின்றி நல்ல முறையில் இயங்கி வரப்படுகிறது. இதனை அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர், ஆணையர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் ஆகியோரால் அவ்வப்போது ஆய்வு செய்து வரப்படுகிறது.

## <u>முதல்வரின் காலை உணவு திட்டம்</u>

விழுப்புரம் நகராட்சியில் உள்ள அரசு பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்குதல் குறித்து சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 07.03.2022 அன்று சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிட்டு அறிவித்ததை தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை (ச.ந 4+1) நாள்.27.07.2022 இதனை தொடர்ந்து விழுப்புரம் நகராட்சியில், உள்ள ஆரம்பப் பள்ளிகள் 13, நடுநிலை பள்ளிகள் 3, மேல்நிலைப்பள்ளி 1–ஆக மொத்தம் 17 பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை உணவு 16.09.2022 அன்று முதல் முதல் கட்டமாக 13 ஆரம்பப் பள்ளிகளுக்கும் (பயனாளிகள் எண்ணிக்கை 1594) இரண்டாம் கட்டமாக 01.03.2023 அன்று முதல் 3 நடுநிலை பள்ளிகள் (பயனாளிகள் எண்ணிக்கை 308) சேர்த்து 16 பள்ளிகளுக்கு (பயனாளிகள் எண்ணிக்கை 1902) மூன்றாம் கட்டமாக 15.08.2023 அன்று முதல் ஒரு மேல்நிலைப்பள்ளியினை (பயனாளிகள் எண்ணிக்கை 293) சேர்த்து 17 பள்ளிகளுக்கும் (பயனாளிகள் எண்ணிக்கை 2194) அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் தொடர்ந்து காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. விழுப்புரம் நகராட்சி திரு.காமராஜர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிதாக 27.50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மைய சமையல் கூட்டத்திலிருந்து உணவு தயார் செய்யப்பட்டு காலை 7.00 மணி அளவில் இருந்து 8.15 மணிக்குள் இரு பிரிவுகளாக இரு வேறு வழித்தடங்களில் மூடிய இரண்டு வாகனங்களில் 17 பள்ளிகளுக்கும் உணவு கொண்டு செல்லப்படுகிறது. மொத்தம் பயனாளிகள் எண்ணிக்கை – 2194 உணவு தயார் செய்து தரும் பணியினை ஒப்பந்ததாரர்

ஹோட்டல் ஜீவன் பார்க் முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் என்பவர் செய்து வருகிறார். ஒரு மாணவரின் உணவுக்கான தினசரி செலவு ஒப்பந்த தொகை ரூபாய் 12.50 காசு (போக்குவரத்து செலவு உட்பட) உணவிற்கான மாதாந்திர செலவு சராசரியாக ரூபாய்.5,23,050/– இத்தகையானது அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மேலும் 100 குழந்தைகளுக்கு ஒருவர் வீதம் 25 உணவு பரிமாறும் பணியாளர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு குழந்தைகளுக்கு உணவு பரிமாறும் பணியுடன் தட்டு, தம்பளர் மற்றும் பாத்திரங்கள் சுத்தம் செய்யும் பணியினையும் செய்திடவும், தற்காலிக பணியாளர் ஒருவருக்கு மாத ஊதியமாக ரூபாய்.1,500/– வழங்கப்படுகிறது. இத்தொகையினை நகராட்சி கல்வி நிலையிலிருந்து வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

* * * * * *

## முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்

### <u>மைய சமையல் கூடம்</u>

### <u>திரு.காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம்</u>

| வ. எண் | பள்ளியின் பெயர் | குழந்தைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | ஆண் | மொத்தம் |
| 1 | நகராட்சி ஆரம்பப்பள்ளி பி.என் தோப்பு | 172 | 70 | 142 |
| 2 | நகராட்சி ஆரம்பப்பள்ளி கீழ்பெரும்பாக்கம் | 167 | 158 | 325 |
| 3 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி எருமணந்தாங்கல் | 7 | 14 | 21 |
| 4 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி எம்.குச்சிப்பாளையம் | 10 | 8 | 18 |
| 5 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி பானாம்பட்டு | 18 | 30 | 48 |
| 6 | அரசு நல தொடக்கப்பள்ளி (ஆதி.ந) பானாம்பட்டு | 29 | 29 | 58 |
| 7 | நகராட்சி ஆரம்பப்பள்ளி பூந்தோட்டம் | 203 | 190 | 393 |
| 8 | நகராட்சி ஆரம்பப்பள்ளி மருத்துவமனை சாலை | 192 | 194 | 386 |
| 9 | நகராட்சி ஆரம்பப்பள்ளி காமராஜர் தெரு | 3 | 7 | 10 |
| 10 | நகராட்சி உருது ஆரம்பப்பள்ளி காமராஜர் தெரு | 3 | 6 | 9 |
| 11 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வ.பாளையம் | 18 | 17 | 35 |
| 12 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆதிதிராவிடர் நலம் வழுதரெட்டி | 55 | 51 | 106 |
| 13 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆசாகுளம் | 21 | 22 | 43 |
| 14 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ,சாலா மேடு | 89 | 83 | 172 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ,காகுப்பம் | 32 | 40 | 72 |
| 16 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வழுதரெட்டி | 32 | 32 | 64 |
| 17 | அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திரு.வி.க தெரு | 193 | 100 | 293 |
| | மொத்தம் | 1244 | 1051 | 2195 |

## நகரமைப்பு பிரிவு

**பணியாளர் விவரம் :–**

1. நகரமைப்பு அலுவலர் – 1
2. நகரமைப்பு ஆய்வர்கள் – 1
3. வரைவாளர் – 0

**முழுமைத் திட்டம்:–**

விழுப்புரம் நகரத்திற்கு முழுமைத் திட்டம் விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் சார்பாக நகர் ஊரமைப்பு இயக்குநரால் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.984. (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை) நாள்.24–11–1984–ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1971–ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 32(2) (பி)ன்படி விழுப்புரம் முழுமை திட்டம் புதியதாக சர்வே செய்யப்பட்டு ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி தற்போது நிலையில் உள்ளது போல் திட்ட மாற்றங்கள் முழுமை திட்டத்தில் செய்யப்பட்டு அரசின் இணைக்கத்திற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.493/98/எப்2, நாள்.10–12–1998–ல் நகரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பேரில் அரசாணை எண்.368 (நகர்ப்புற வளர்ச்சித்துறை) நாள் 30–08–2000–ல் விழுப்புரம் முழுமைத் திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்திட அரசால் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு பிரிவு 28 அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD.4.2) துறை நாள்.04–06–2004–இல் முழுமைத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட பிரிவு அபிவிருத்தி திட்டங்கள்**

விழுப்புரம் நகராட்சி எல்லைப் பகுதி மட்டும் விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழும பகுதியாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமத்தில் கீழ்கண்ட ஒன்பது அங்கீகரிக்கப்பட்ட பிரிவு அபிவிருத்தி திட்டங்கள் அமுலில் உள்ளன.

1. நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி – 1
2. நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி – 2

3. வி.மருதூர் விரிவு அபிவிருத்தி திட்டம்
4. கமலா நகர் விரிவு அபிவிருத்தி திட்டம்
5. மேற்கு விஸ்தரிப்பு அபிவிருத்தி திட்டம்
6. நரசிங்கபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம்
7. ஆதிதிராவிடர் காலனி விரிவு அபிவிருத்தி திட்டம்
8. பூந்தோட்டம் விரிவு அபிவிருத்தி திட்டம் – 1
9. பூந்தோட்டம் விரிவு அபிவிருத்தி திட்டம் – 2

**1. நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி – 1**

நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி–1 ஊரமைப்பு சட்டப்பிரிவு–12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.2800, நாள்.13–09–1957–ல் பிரசுரிக்கப்பட்டது. 1971–ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டப்பிரிவு 29–ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் தனது செயல்முறை உத்திரவு ந.எ.எண்.15493/80/டி1, நாள்.08–04–1981–ல் அங்கீகரித்துள்ளார். இத்திட்டத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)–ன் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 21.14 ஹெக்டர் (52.23 ஏக்கர்)

**2. நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி–2**

நெடுஞ்சாலை மாற்றுப்பாதை விரிவு அபிவிருத்தி திட்டம் பகுதி–2, நகரமைப்பு சட்டம் பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு 24.05.1973–ந் தேதிய அரசாணை எண்.1040–ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)–ன் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீர்ணம் 60.10 ஹெக்டர் (148.50 ஏக்கர்)

**3. வி.மருதூர் விரிவு அபிவிருத்தி திட்டம்**

வி.மருதூர் விரிவு அபிவிருத்தி திட்டம் நகரமைப்புச் சட்டம் பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.1528 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை), நாள் 27–07–1963–ல் பிரசுரிக்கப்பட்டது. இத்திட்ட பிரேரேணைகள் நகர் ஊரமைப்பு

இயக்குநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு செயல்முறை உத்திரவு ந.க.எண்.22848/78/டி1, நாள்.21-08-1980-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)-ன் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் இத்திட்டத்தில் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. 17-05-1999 தேதிய உள்ளூர் திட்ட குழு தீர் எண்.72-ல் அனுமதி அளிக்கப்பட்டு ந.க.எண்.524/91/எப்2 கடிதத்தில் பரிந்துரை செய்து சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன் பேரில் சென்னை, நகர ஊரமைப்பு சிறப்பு ஆணையரின் ந.க.எண்.33097/99/டிநி2, நாள்.31-01-2001 செயல்முறை ஆணையில் வி.மருதூர் விரிவு அபிவிருத்தி திட்டப் பணியினை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)-ன் கீழ் ஒருங்கிணைத்து திட்ட மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகர ஊரமைப்பு சட்டம் பிரிவு 21-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது .

இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீர்ணம் 30.99 ஹெக்டர் (76.55 ஏக்கர்)

**4 கமலா நகர் அபிவிருத்தி திட்டம்**

கமலா நகர் விரிவு அபிவிருத்தி திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 12-ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.2800, நாள்.13-09-1957-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 1971-ம் வருடத்திய நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 29-ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 24-08-2008-ம் தேதிய செயல்முறை உத்திரவு ந.க.எண்.15473/77/டிநி1-ல் அனுப்பப்பட்டுள்ளது. இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில், நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)-ன் கீழ், மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு, விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.92, நாள்.03-07-1993-ல் தீர்மானித்து திட்ட மாற்றம் குறித்த பிரேரணைகள் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு இவ்வலுவலக கடிதம் 06-10-1998-ல் சமர்ப்பிக்கப்பட்டது.

நகர் ஊரமைப்பு ஆணையாளர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட வளர்ச்சிகளின் விவரங்கள் தெளிவாக தெரிவித்து தனித்தனி உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானங்கள் அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.99/98/செ.ம.5, நாள்.28-03-1999-ல் கோரியதால் உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 17-05-1999 தேதிய உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மான எண்.78-ல் அனுமதியளிக்கப்பட்டு எப்2/524/91 எண் திட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்பேரில் சென்னை

நகர ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் ந.க.22935/99/டிபி2, நாள்.09–02–2001 செயல்முறையில் கமலா நகர் விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியை நகர ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)–ன் கீழ் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்த நகர ஊரமைப்பு சட்டம் பிரிவு 21–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு 11–04–2001–ல் வெளியிடப்பட்டது. இதனைத்தொடர்ந்து 16–12–2002–ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட பகுதியின் மொத்த விஸ்தீரணம் 16.75 ஹெக்டர் (41.37 ஏக்கர்)

5. <u>மேற்கு விஸ்திரிப்பு விரிவு அபிவிருத்தி திட்டம்</u>

மேற்கு விரிவு அபிவிருத்தி திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 12–க் கீழ் தயாரிக்கப்பட்டு 19–05–1966–ம் தேதிய அரசாணை எண்.1289–ல் பிரசுரிக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29–ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநரின் செயல்முறை உத்தரவு எண்.7373/78/டி1, நாள்.31–05–1979–ல் இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அங்கீகாரம் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)க் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்டம் மாற்றம் செய்வதற்கு, விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.92, நாள்.03–07–1998–ல் தீர்மானித்து திட்ட மாற்றம் குறித்த பிரேரணைகள் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு இவ்வலுவலக கடிதம் 06–10–1998–ல் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மாற்றி அமைக்கப்பட்ட வளர்ச்சிகளின் விவரங்கள், தெளிவாக தெரிவித்து தனித்தனி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானங்கள் அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கடிதம் எண்.99/98 செ.ம.5, நாள்.28–03–1999–ல் கோரியதால் 17–05–1999 தேதிய உள்ளூர் திட்ட குழு தீர்மான எண்.77–ல் அனுமதிக்கப்பட்டு எப்2/524/91 எண்திட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன் பேரில் சென்னை, நகர ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் ந.க.எண்.34890/98/டிநி2, நாள்.31–10–2001 செயலாணையில் மேற்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தி திட்ட பகுதியை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு

33(1)–ன் கீழ் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகர ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 21–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி

அறிவிப்பு 11–04–2001–ல் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 16–12–2002–ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 411.63 ஹெக்டர் (102.35 ஏக்கர்)

6. <u>நரசிங்கபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம்</u>

நரசிங்கபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் நகரமைப்பு சட்டப்பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.2800, நாள்.123–09–1957–ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புச் சட்டம் 29–ன்படி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு எண்.32452/86/டி1, நாள்.31–12–1986–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவு 33(1)–ன் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகர் ஊரமைப்பு இயக்குநர், கடிதம் எண்.1457/89டி3, நாள்.102–06–1986–ல் இத்திட்டப் பகுதியில் திட்ட விதிகளை அமுல்படுத்த தேவையில்லை என்றும், கட்டிட விதிகளை அமுல்படுத்தினால் போதும் என்றும் தெரிவித்துள்ளார்கள். 17–05–1999 தேதிய உள்ளூர் திட்டக் குழு தீர்மான எண்.73–ல் அனுதிக்கப்பட்டு எப்2/524/91 எண் திட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணைர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்பேரில் சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் ந.க.எண்.32595/99/டிபி2, நாள்.12–10–2000 செயல்முறை ஆணையில் நரசிங்கபுரம் விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)–ன் கீழ் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 21–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு 11–04–2001–ல் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 16–12–2002–ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 25.12 ஹெக்டர் (62.06 ஏக்கர்)

<u>7. ஆதிதிராவிடர் காலனி விரிவு அபிவிருத்தி திட்டம்</u>

ஆதிதிராவிடர் காலனி விரிவு அபிவிருத்தி திட்டம் நகர் ஊரமைப்பு சட்டப் பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண்.553 (பொது சுகாதாரம்) நாள்.27–08–

1957–ல் பிரசுரிக்கப்பட்டு, நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 29–ன் கீழ் ஊரமைப்பு இயக்குநர் செயல்முறை உத்திரவு எண்.8525/80/டி1, நாள்.19–09–1980–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்ட பகுதியில் 1978–ம் வருடம் ஜூலை மாதம் நடந்த ஜாதி கலவரத்தால் பாதிக்கப்பட்டதின் காரணமாக எவ்வித விதிகளையும் அனுசரிக்காமல் கட்டிடம் கட்ட அனுமதியளிக்க ஆணையாளருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணை எண்.303 (வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித்துறை) நாள்.15–03–1979–ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண் 92 நாள் 03.07.98–ல் தீர்மானித்து திட்ட மாற்றம் குறித்த பிரேரணைகள் நகர் ஊரமைப்பு ஆணையாளருக்கு 06.10.98–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மாற்றியமக்கப்பட்ட வளர்ச்சி பணிகளின் விவரங்கள் தெளிவாக தெரிவித்து தனித்தனி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானங்கள் அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ந.க.எண்.99–98–செ.ம.5 நாள்.28.03.99–ல் கோரியதால் 17.05.99 தேதிய உள்ளூர் திட்டக் குழு தீர்மான எண்.76–ல் அனுமதிக்கப்பட்டு எப்2/524/91 எண் திட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்பேரில் சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரின் ந.க.எண்.3409/98/டிநி2 நாள்.31.01.2001 செயல் ஆணையில் ஆதிதிராவிடர் காலனி விரிவு அபிவிருத்தி திட்ட பகுதியை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் ஒருங்கிணைந்த திட்டம் மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்த நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 21–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு 11.04.2001ல் வெளியிடப்பட்டது. இதனைத்தொடர்ந்து 16.12.2002–ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 28.93 ஹெக்டர் (76.58 ஏக்கர்).

## 8. பூந்தோட்டம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1

பூந்தோட்ட விரிவு அபிவிருத்தி திட்ட எண் 1 நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு அரசாணை எண் 1353 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 27.07.63–ல் பிரசுரிக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29–ன் கீழ் நகரமைப்பு

இயக்குநர் செயல்முறை உத்திரவு எண் 20579/87/டி1, நாள் 22.10.87–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1) கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.92, நாள்.03.07.98–ல் தீர்மானித்து திட்ட மாற்றம் குறித்த பிரேரணைகள் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு இவ்வலுவலக கடிதம் 06.10.98–ல் சமர்பிக்கப்பட்டது.

இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட வளர்ச்சி பணிகளின் விவரங்கள் தெளிவாக தெரிவித்து தனித்தனி உள்ளூர் திட்டக் குழுமத்தின் தீர்மானங்கள் அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.99/98/செ.ம.5 நாள்.28.03.99–ல் கோரியதால் உள்ளூர் திட்டக் குழு தீர்மான எண்.74–ல் அனுமதிக்கப்பட்டு எப்2/524/91 எண்ணிட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்பேரில் சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரின் ந.க.எண்22934/99/டிநி2 நாள்.31.01.2001 செயல்முறை ஆணையில் பூந்தோட்ட விரிவு அபிவிருத்தி திட்டம்–1 அடங்கிய பகுதியை நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(1)ன் கீழ் ஒருங்கிணைந்த திட்டம் மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு 11.04.2001ல் வெளியிடப்பட்டது, இதனைத்தொடர்ந்து 16.12.2002–ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 45.16 ஹெக்டர் (111.60 ஏக்கர்).

<u>9. பூந்தோட்டம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் –2</u>

பூந்தோட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 2 நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 12–ன் கீழ் தயாரிக்கப்பட்டு 24.05.66 அரசாணை எண் 1353 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை) நாள்.24.05.66–ல் பிரசுரிக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29–ன் கீழ் நகரமைப்பு இயக்குநர் செயல்முறை உத்திரவு எண்.73789/78/டி1 நாள்.11.04.79–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1) கீழ் மறு ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட மாற்றம் செய்வதற்கு விழுப்புரம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண் 92 நாள்.03.07.98–ல் தீர்மானித்து திட்ட மாற்றம் குறித்த பிரேரணைகள் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு 06.10.98–ல் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட வளர்ச்சி பணிகளின் விவரங்கள் தெளிவாக தெரிவித்து தனித்தனி உள்ளூர் திட்டக் குழுமத்தின் தீர்மானங்கள் அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.99/98/செ.ம.5, நாள்.28-03-1999-ல் கோரியதால் உள்ளூர் திட்டக் குழு தீர்மான எண்.75-ல் அனுமதிக்கப்பட்டு எப்2/524/91 எண்ணிட்ட இவ்வலுவலக கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன் பேரில் சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையரின் ந.க.எண்.22934/99/டிநி2, நாள்.31-01-2001 செயல் ஆணையில் பூந்தோட்டவிரிவு அபிவிருத்தி திட்டம்-2 அடங்கிய பகுதியை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் ஒருங்கிணைந்த திட்டம் மாற்றம் செய்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 21-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33(2)ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் இறுதி அறிவிப்பு 11-04-2001-ல் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 16-12-2002-ல் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பகுதியின் மொத்த விஸ்தீரணம் 24.34 ஹெக்டேர் (60.24 ஏக்கர்).

<u>தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல நிதி</u>

கட்டிட உரிமம் பெறுவதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது மொத்த கட்டுமான செலவில் குறிப்பிட்ட சதவீதத்தை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்துக்கு செலுத்த 1982-ம் வருடத்திய தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் சட்டத்தின் பிரிவு 8எ-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

15-06-1997 முதல் அரசாணை எண்.80, நாள்.05-06-1997-ல் பிரிவு 8எ தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் பஞ்சாயத்துக்களுக்கு பொருந்தும் என்றும், நகராட்சிகள் கட்டிட அனுமதி வழங்கும் போது கட்டிட மதிப்பீட்டில் 0.3%-ஐ தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்காக சந்தாவாக வசூல் செய்து, வரைவு கேட்போலை மூலம் MANUAL WORKERS GENERAL WELFARE FUND OF THE T.N.C.W.W. BOARD என்ற தலைப்பில் வாரியத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இது தவிர நகராட்சிகளே எவ்வித கட்டுமான பணி மேற்கொண்டாலும் அந்த கட்டுமான பணியின் மதிப்பீட்டில் 0.3%-இவ்வாரியத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.295 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை) நாள்.17-12-2013 மூலம் சந்தா தொகையானது 0.3%-லிருந்து 1%-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டு 01-01-2014 முதல் பெறப்பட்ட கட்டிட விண்ணப்பதாரர்களிடமிருந்து

கட்டிட மொத்த மதிப்பீட்டில் 1%-ஐ சந்தா தொகையாக வசூலித்து வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.

அறிக்கையாண்டில் கட்டிட தொழிலாளர் நிதி ரூ.53,91,770/- (2023-2024) வசூலிக்கப்பட்டு ஆணையாளர், தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம், சென்னை அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

<u>நகர எல்லை விரிவுபடுத்துதல்</u>

விழுப்புரம் நகரம் 8.36 ச.கி.மீ. பரப்பளவு உடையதாகும். விழுப்புரம் நகர எல்லையுடன் சாலாமேடு, வழுதரெட்டி, காகுப்பம், எருமணந்தாங்கல் மற்றும் பாணாம்பட்டு ஆகிய 5 ஊராட்சிகளை இணைக்க இந்நகர மன்ற தீர்மான எண்.319, நாள்.19-10-2010ல் தீர்மானிக்கப்பட்டது. அதன் பேரில் மேற்படி 5 ஊராட்சிகளை நகர எல்லையுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை மூலமாக ந.க.எண்.15002/2010/எப்2ப் நாள்.19-10-2010ல் பிரேரனை அனுப்பப்பட்டது. மேற்படி 5 ஊராட்சிகளை நகர எல்லையுடன் இணைத்து உத்தேச விரிவாக்கம் செய்ய அரசாணை (நிலை) எண்.287 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) துறை நாள்.19-11-2010ல் ஆணையிடப்பட்டது.

மேற்படி 5 ஊராட்சிகளை நகர எல்லையுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து அரசாணை (நிலை) எண்.33 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.31-01-2011ல் ஆணையிடப்பட்டது. மேற்படி விவரம் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் No.38, நாள்.31-01-2011ல் பிரசுரிக்கப்பட்டது. தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு நகராட்சியுடன் இணைக்கப்பட்டது.

<u>விளம்பரப் பலகை</u>

தற்போது நகராட்சி பகுதிகளில் விளம்பர பலகைகளுக்கான உரிமம் வழங்கும் அதிகாரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.47 மற்றும் 48, நாள்.26-07-2003 மற்றும் தமிழ்நாடு சட்டம் எண்.19/2003ன்படி நகராட்சி ஆணையர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் உரிமக் கட்டணங்களையும், விளம்பரப் பலகைகளின் மீதான விளம்பர வரியில் நூற்றுக்கு 75 விழுக்காட்டினை அரசின் கணக்கிலும், மீதமுள்ள 25 விழுக்காட்டினை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் கணக்கிலும் வரவு வைப்பதற்கு அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்து விளம்பரப் பலகைகள் நகராட்சி மூலம் அகற்றப்பட்டது.

அரசாணை எண்175, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.16.11.2011–ல் டிஜிட்டல் பேனர்/ விளம்பர பதாகை கார்டு தற்காலிகமாக (6 நாட்கள்) அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று அமைத்துக் கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் இவ்வினத்தின் கீழ் ரூ.62,250/–, 2023–2024 வசூலிக்கப்பட்டுள்ளது.

<u>நகராட்சி பூங்கா விரிவாக்கம்</u>

விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு –A, பிளாக்–56, நகரளவு எண்.23–ல் 9400 சதுர மீட்டரில் அமைந்துள்ள நகராட்சி பூங்கா மற்றும் சிறுவர்கள் விளையாடுமிடம் சுமார் 60 ஆண்டிற்கு மேல் பழமை வாய்ந்ததும், நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள பூங்காவாகும். மேற்கண்ட நகராட்சி பூங்காவினை பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலை வரை விரிவுபடுத்தி புதுப்பொலிவுடன் நவீன முறையில் அழகுபடுத்துவதற்காக பண்டிட் ஜவஹர்லார் நேரு சாலைக்கும், நகராட்சி பூங்காவிற்கும் இடையில் அமைந்துள்ள வார்டு –A, பிளாக்–54, நகரளவு எண்.19/1பி–ல் 2660 சதுர மீட்டர் பரப்பளவுள்ள அரசுக்கு சொந்தமான நிலத்தினை நகராட்சிக்கு பூங்கா விஸ்தரிப்பிற்காக நில உரிமை மாற்றம் செய்யக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்கள் வழியாக சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, சிறப்பு ஆணையர் நில நிர்வாக ஆணையர் அவர்களால் அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே, அரசாணையில் கடித எண்.பி3/7793/2008, நாள்.17–06–2008 தெரிவித்துள்ளபடி நில உபயோக மாற்றமில்லாமல் பூங்கா விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

<u>நகராட்சி பழைய பேருந்து நிலைய விரிவாக்கம்</u>

விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலையில் வார்டு–A, பிளாக்–20, நகரளவு எண்.2, 12 & 13–ல் 7683 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா நகராட்சி பேருந்து நிலையமானது 1968–ல் அமைக்கப்பட்டதாகும். பழைய பேருந்து நிலையத்திற்கும், திருச்சி தேசிய

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்திற்கும் நகருக்குத் தொலை தூர இடைவெளியில் இயங்கி வருவதால், இந்நகருக்கு வந்து செல்லும் பயணிகள் மிகவும் சிரமப்படுவதாகவும், தற்பொழுது அறிஞர் அண்ணா நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டிடங்கள் மிகவும் பழமையானதாகவும், உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளதாலும், பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் நகர விரிவாக்கம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பழைய பேருந்து நிலையத்தை விரிவு படுத்தி நவீன முறையில் வணிக வளாகத்துடன் 78 கடைகள் புதியதாக கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளன,

**சமுதாய அமைப்பாளர் பிரிவு**

**(1) Shelter for Urben Home Less**

இத்திட்டத்தின் கீழ் புதியதாக ஒரு Shelter கட்டுவதற்கு Proposal அளிக்கப்பட்டுள்ளது கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு செய்து 32 நபர் கண்டறியப்பட்டுள்ளது. இவ் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் வரப்பெறவில்லை.

(2) **Support to Urban Street Vendors –630Street Vender–**களை கணக்கெடுப்பு செய்து அதற்குண்டான Data Entry செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் 8.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*****

**2023-24-ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வரும்**
**திட்ட பணிகளின் விபரம்**

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| | **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024** | |
| 1 | **சிப்பம்-1**<br>Providing Block topping surface road at Arumugam nagar – 044001R438, Arumugam nagar – 044001R437, Sundaram street cross – 044001R482, Sundar 1st street – 044001R463, Sundar 1st street – 044001R371, Sriwari nagar – 044018R1314, Yesuraja nagar – 044019R1323, Adhithanar street – 044025R354, Thangam nagar (f) – 044026R124, Thangam nagar (b) – 044026R131, Kulakarai street b – 044032R895,Roja nagar 2nd street – 044034R023, Roja nagar 1st street – 044034R019 in Villupuram municipality. | 105.00 |
| 2 | **சிப்பம்-2**<br>Providing Block topping surface road at Aadal nagar road 1st street – 044035R997, Nehru nagar extension – 044039R1040, Annai indira street cross street – 044035R993, Gandhi nagar – 044035R1068, Annai indira gandhi nagar 3rd street – 044035R992, Indira nagar 6th street – 044039R950, Indira nagar 5th street – 044039R949, saravana nagar – 044039R960, Jeevaraj nagar 1st cross street – 044040R1207, Jeevaraj nagar 2nd main street – 044040R1214, Arcot nagar main road – 044040R1230, Jeevaraj nagar 7th street – 044040R1231, Jeevaraj nagar 2nd main street – 044040R1208, Periyar nagar 2nd lane – 044007R1366, Galir garden B – 044007R1364, Arunthathiyar street A – 044013R558, Ramanujam street – 044016S212 in Villupuram municipality. | 131.00 |
| 3 | **சிப்பம்-3**<br>Providing Cement Concrete Pavement at Indhira nagar 04407S172, Nanthanar cross street 044013S064, chinthamani street 044015L022, om sakthi nagar main street 044004R1402, Srinivasa nagar 1st cross 044030R1698, Ayyanar koil street b 044037R1577, Puthu nagar main street 044040S116, Aravinda nagar 1st street 044040R1131, Barbar quarters 3rd street c 044040R1126 in Villupuram Municipality | 88.00 |
| | **SFC Arrear Fund 2023-24** | |
| 1 | **சிப்பம்-1**<br>Providing Cement Concrete Pavement at Kattabomman Nagar 4th Street 044004s168, Kattabomman Nagar 5th Street B 044004r1387, Kattabomman Nagar 3rd Street 044004s167, Kattabomman Street 044004s169, Kattabomman Nagar 2nd Street 044004r1388, Gopalakavundar Street 044006r1415, Kannagi Street 044006r1477 in Villupuram Municipality | 39.89 |
| 2 | **சிப்பம்-2**<br>Providing Cement Concrete Pavement at Vallalar Nagar 1st Street 044035r963, Bharathiyar Street 1st, 044035r1061, Manju Nagar 1sr Street 044035r820 and Providing Block Topping Surface Road at Rajarajan Street 044035r1034, Abirami Street 044035r1016, Kavingar Kannathasan 044035r1033 in Villupuram Municipality | 27.17 |
| 3 | **சிப்பம்-3** | 25.93 |

| | | |
|---|---|---|
| | Providing Cement Concrete Pavement at Sivasankar Street 044036r699, Marutham 2nd Street 044038r692, Marutham 1st Street 044038r691, Marutham 3rd Street 044038r695 and Providing Block Topping Surface Road at Gowtham Nagar 1st Street 044036r706, Selvavinayagar Street 044036r709, Srinivasa Nagar 1st Street 044036r705 in Villupuram Municipality | |
| 4 | <u>சிப்பம்-4</u><br>Providing Block Topping Surface Road at TNHB Street 044038r1159, TNHB Street 044038r1160, TNEB Road 044038r1170, TNHB Road Main Road 044038r1201 iln Villupuram Municipality | 38.60 |
| 5 | <u>சிப்பம்-5</u><br>Providing Cement Concrete Pavement at TPTC Quarters Thamarbarani Main Road 044041r918 & Salamedu East Thamiraparani Sathukkam 044041r1072 in Villupuram Municipality | 34.96 |
| 6 | <u>சிப்பம்-6</u><br>Providing Block Topping Surface Road at East Sriram Nagar 2nd Cross St 044039r1103, Aasiriyare Nagar-2nd Cross 044039r1164, East Sriram Nagar 1st Cross St 044039r1104, Aasiriyare Nagar-1 St Cross 044039r1165, Kasturi Bhai 2nd Street 044040r1172, Annai Teresa Street 044041r811 in Villupuram Municipality | 34.80 |
| 7 | <u>சிப்பம்-7</u><br>Providing Block Topping Surface Road at Pandiyan Nagar Ext 044034r852, Pandiyan Nagar Extension-Ii 044034r853, Pandiyan Nagar Extension-Ii 044034r863 in Villupuram Municipality | 15.17 |
| 8 | <u>சிப்பம்-8</u><br>Providing Block Topping Surface Road at Teachers Colony 3rd Cross Street 044030r1616, Teachers Nagar Subramann Nagar 044030s238, Teachers Colony Church Street 044030r1626, Teachers Nagar 4th Cross Street 044030r1617, Vasantham Nagar, Ragavanpettai 044030r1689,Teachers Colony 5th Cross Street 044030r1627 and Providing Cement Concrete Pavement at Teachers Colony 3rd Road Cross Street 044037r1615 in Villupuram Municipality | 33.06 |
| 9 | <u>சிப்பம்-9</u><br>Providing Block Topping Surface Road at KRG Nagar 2nd St 044030s235, KRG Nagar 1 St Str 044030s236 and KRG Nagar 3Rd Str 044030r1605 in Villupuram Municipality | 38.93 |
| 10 | <u>சிப்பம்-10</u><br>Providing Block Topping Surface Road at Vasanthan Nagar A 044030r1610, Vasantham Nagar Subramaniyan Nagar 044037r1690, Vasantham Nagar, Ragavanpettai 044030r1620, Vasantham Nagar 5th Cross 044030r1619, Vasantham Nagar 5th Street 044030r1622, Lakshmi Nagar Extn D 044030r1670 and Providing Cement Concrete Pavement at KRG Nagar Extension 044030r1604 in Villupuram Municipality | 27.49 |
| | <u>15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023-24 (Untied Grant)</u> | |
| 1 | வார்டு எண்.23 பூந்தோட்டம் மேட்டு தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044023R238) | 6.50 |
| 2 | வார்டு எண்.11 சிவரஞ்சனி தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044011S012) | 2.60 |
| 3 | வார்டு எண்.11 சண்முக பிரியா தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044011S010) | 4.25 |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு எண்.08 திடீர்குப்பம் முதல் குறுக்கு தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044008S038) | 2.30 |
| 5 | வார்டு எண்.13 GRP தெருவிற்கு (B) தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044013S068) | 2.90 |
| 6 | வார்டு எண்.24 தனலட்சுமி குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044024R162) | 9.25 |
| 7 | வார்டு எண்.23 வரதராஜா லே அவுட் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044023R241) | 9.70 |
| 8 | வார்டு எண்.11 கங்கை தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044011S007) | 5.90 |
| 9 | வார்டு எண்.10 சீதாராமன் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044010R400) | 4.10 |
| 10 | வார்டு எண்.08 திடீர்குப்பம் 2-வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044008S039) | 1.90 |
| 11 | வார்டு எண்.13 GRP தெருவிற்கு (B) சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044013R553) | 9.60 |
| 12 | வார்டு எண்.13 GRP தெருவிற்கு (A) சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044013S067) | 9.70 |
| 13 | வார்டு எண்.23 பூந்தோட்டம் வலது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044023R619) | 3.40 |
| 14 | வார்டு எண்.27 மருதமலை முருகன் நகருக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044027R586) | 2.30 |
| 15 | வார்டு எண்.21 இராமாயணம் தெரு (ம) சுப்புராயர் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044021R623) | 8.70 |
| 16 | வார்டு எண்.29 பிள்ளையார் கோவில் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044029R661) | 4.30 |
| 17 | வார்டு எண்.27 பழனிவேல் லே அவுட் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044027R739) | 5.60 |
| 18 | வார்டு எண்.27 பழனிவேல் லே அவுட் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044023R738) | 3.40 |
| 19 | வார்டு எண்.19 தாயுமானவர் 2-வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044019R1344) | 6.10 |
| 20 | வார்டு எண்.07 கோவிந்தசாமி லே அவுட் 2-வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044007R1360) | 6.10 |
| 21 | வார்டு எண்.07 கோவிந்தசாமி லே அவுட் 2-வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044007R1361) | 5.10 |
| 22 | வார்டு எண்.07 புகழேந்தி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code-044007R1371) | 7.10 |
| 23 | வார்டு எண்.25 E to W அலமேலுபுரம் தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044025R303) | 11.00 |
| 24 | வார்டு எண்.08 முத்தோப்பு திடீர் குப்பம் பகுதிக்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044008R506) | 18.00 |
| 25 | வார்டு எண்.13 GRP தெருவிற்கு (A) தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044013R552) | 11.45 |
| 26 | வார்டு எண்.16 பொன்முடி நகர் மெயின் ரோட்டிற்கு தார்சாலை அமைக்கும் பணி (Unique Code-044016R1474) | 30.25 |

| | | |
|---|---|---|
| 27 | வார்டு எண்.03 அகரம்பாட்டை மெயின் ரோடு பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code–044003R499) | 15.50 |
| 28 | வார்டு எண்.08 TVK ரோடு பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code–044008R510) | 33.60 |
| 29 | வார்டு எண்.10 பெருமாள் கோவில் சந்து பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code–044010R532) | 11.20 |
| 30 | வார்டு எண்.14 வ.ஊ.சி முதல் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code–044014R570) | 12.90 |
| 31 | வார்டு எண்.06 தேவார தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி (Unique Code–044006R1343) | 10.30 |
| | அம்ரூட் 2.0 திட்டம் 2023–2024 | |
| 1 | **வார்டு எண்**.35 **போலீஸ் ஜெகநாதன் நகர் பூங்காவினை** மேம்பாடு செய்யும் பணி | 45.00 |
| | நமக்கு நாமே திட்டம் 2023–24 | |
| 1 | **வார்டு எண்**.03 **சித்தேரிக்கரை விரிவாக்கம் பகுதியில்** பழுதடைந்த சிமெண்ட் சாலை (Unique Code: 044003R500) **புதுப்பிக்கும் பணி** | 22.50 |
| 2 | **வார்டு எண்**.17, **மகாராஜபுரம் அங்கன்வாடி சுற்றுசுவர் கட்டும் பணி** | 3.00 |
| 3 | **விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக பூங்காவில்** REBOUND TENNIS COURT **அமைக்கும் பணி**. | 6.76 |
| | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–24 | |
| 1 | **வார்டு எண்**.28 **ராஜீவ்காந்தி நகரில் அங்கன்வாடி கட்டடம், போர் மற்றும் கழிவறை அமைத்தல் பணி**. | 13.90 |
| 2 | **வார்டு எண்**.5 **எருமணந்தாங்கலில் அங்கன்வாடி கட்டடம், போர் மற்றும் கழிவறை அமைத்தல் பணி**. | 13.90 |
| 3 | **வார்டு எண்**.32 **வழுதரெட்டி காலனியில் அங்கன்வாடி கட்டடம், போர் மற்றும் கழிவறை அமைத்தல் பணி**. | 13.90 |
| 4 | **வார்டு எண்**.25 **மாம்பழப்பட்டு ரோடு அலமேலுபுரத்தில் நியாய விலைக்கடை கட்டடம் அமைத்தல் பணி**. | 13.50 |
| 5 | **வார்டு எண்**.39 **சிங்கப்பூர் நகரில் நியாய விலைக்கடை கட்டடம் அமைத்தல் பணி**. | 13.50 |
| 6 | **வார்டு எண்**.7 **கீழ்பெரும்பாக்கம்** MDG **நகரில் நியாய விலைக்கடை கட்டடம் அமைத்தல் பணி**. | 13.50 |
| 7 | **வார்டு எண்**.41 **தந்தை பெரியார் நகரில் கரும காரிய கொட்டகை அமைத்தல் பணி**. | 11.70 |
| 8 | **வார்டு எண்**.36 **திருச்சி மெயின் ரோடு ஏழுமலை பாலிடெக்னிக் அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல்** (10 x 20) | 5.00 |
| 9 | **வார்டு எண்**.30 **பாண்டி மெயின் ரோடு ஆசிரியர் நகரில் பயணியர் நிழற்குடை அமைத்தல்** (10x15) | 4.10 |
| | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023–24 | |
| 1 | **விழுப்புரம் நகராட்சி வாணக்கார குப்புசாமி தெருவில் உள்ள மஸ்ஜிதுர் ரஹ்மான் இடுகாடு அருகில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும்** பணி. | 2.50 |
| 2 | **விழுப்புரம் நகராட்சி 16–வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மத்தியில் அமைந்துள்ள பூங்காவிற்கு சிறுஉயர்மின் கோபுர விளக்கு அமைக்கும்** பணி. | 2.50 |

விழுப்புரம் நகராட்சி

## 2023–24–ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பணிகளின் விபரம்

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| | **தூய்மை இந்தியா இயக்கம் (2.0) (ம) வருவாய் நிதி** | |
| 1 | **விழுப்புரம் நகராட்சியில் எருமணந்தாங்கல் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decanting Facility தொட்டி அமைக்கும் பணி** | 16.00 |
| | **குடிநீர் (ம) வடிகால் நிதி 2023-24** | |
| 2 | **வார்டு எண்.03 சித்தேரிக்கரை தெருவில் உள்ள பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையம் அருகில் நான்கு சக்கர வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் கழிவு நீரேற்று நிலைய கிணற்றில் புதியதாக MS கிரில் அமைத்தல் பணி** | 4.20 |
| 3 | **வார்டு எண்.03 சித்தேரிக்கரை பகுதியில் சேதமடைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் பிரதான பைப்லைனை புதியதாக பாதாள சாக்கடை பிரதான பைப்லைன் மாற்றி அமைத்து, ஆள்நுழைவு தொட்டி 1 No அமைக்கும் பணி, சாலையினை கிராவல் கொண்டு சீரமைக்க ஆகியவை செய்யும் பணி** | 8.60 |
| 4 | வார்டு எண்.24 ராஜேஸ்வரி நகர் மற்றும் நடேசன் நகரில் பாதாள சாக்கடை Manhole மற்றும் பைப்லைன் அமைக்கும் **பணி** | 4.95 |
| 5 | **வார்டு எண்.15 சேவியர் காலனி நெடுந்தெரு, பாரி நகரில் ஆள்நுழைவு தொட்டி மற்றும் பைப்லைன் அமைக்கும் பணி** | 15.30 |

## குடிநீர் விநியோகம்

### தலைமை நீரேற்று நிலையம் I (எல்லிச்சத்திரம்)

இந்நகராட்சிக்கு குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு, தென்பெண்ணையாற்றுப் படுகையில் எல்லிஸ்சத்திரம் என்னும் இடத்தில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, குடிநீர் இறைக்கப்படுகிறது. இத்தலைமை நீரேற்று நிலையம் நகரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்த தலைமை நீரேற்று நிலையத்தில் தென் பெண்ணையாற்றுப் படுகையில் 20 அடி விட்டமுள்ள உறிஞ்சு கிணறு ஒன்றும், 6அடி விட்டமும் 60அடி ஆழமுள்ள ஒன்பது முக்கிய 68-70 அடி உள்ள 6 புதிய ஆழ்துளை கிணறுகள், 12 அடி விட்டமும் 34 அடி அடி ஆழமும் உள்ள ஒரு வடி கிணறும், 4 அடி உயரமுள்ள விசைப்பற்றி குழாய்களும் உள்ளன. இத்தலைமை நீரேற்று நிலையத்திற்கு ரூ.18.00 லட்சம் செலவில் தனி மின்பாதை அமைக்கப்பட்டு குடிநீர் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தலைமை குடிநீரேற்று நிலையத்தில் மின்பணி செய்பவர்களுக்கு இரண்டு குடியிருப்புகளும், காவலருக்கு ஒரு குடியிருப்பும், அலுவலக பயனுக்கு சேமிப்பு அறையும் கட்டப்பட்டுள்ளது.

**தலைமை நீரேற்று நிலையம் – 2 (ஆனாங்கூர், பில்லூர்)**

இத்திட்டம் 1990–ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அரசாணை எண்.781 (வருவாய் துறை) நாள்.16.05.1990–ல் ரூ.32.00 லட்சம் அனுமதிக்கப்பட்டு அவற்றை குடிநீர் வடிகால் வாரியம் கடலூர் மூலம் ஒப்படைத்துச் செய்யவும் அனுமதிக்கப்பட்டு அதுமுதல் நகராட்சியினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் தலைமையிடம் இந்நகரிலிருந்து 8 கி.மீ. தூரமுள்ள ஆனாங்கூர் என்னுமிடத்தில் உள்ளது. அங்கு இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் 200 எம்.எம்.விட்டமும், 123 மீட்டர் ஆழமும் கொண்டது. இவற்றில் 15 குதிரை வேகமுள்ள ஆழ்குழாய் நீர்மூழ்கி மோட்டார் பொருத்தப்பட்டு, அவற்றின் மூலம் அங்குள்ள 5000 லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட குடிநீர் தேக்க தொட்டிக்கு குடிநீர் இறைத்த பின்னர் அவற்றிலிருந்து 15 குதிரை வேக சென்ட்ரிபியூகல் பம்புசெட் மூலம் குடிநீர் நகரில் உள்ள குடிநீர்த் தேக்க இரண்டாவது பிரிவு தொட்டிக்கு ஏற்றப்பட்டு, நகரின் இரண்டாவது பகுதிக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த தலைமை நீர் இறைப்பு நிலையத்தில் மோட்டார் அறை 3 x 6 மீட்டர் அளவில் கட்டப்பட்டு உள்ளது.

**குடிநீர் விநியோக முறை**

நகரில் குடிநீர் விநியோகம் ரயில்வே லைனுக்கு மேற்குப்புறம் கிழக்குப்புறம் என்று இரண்டாக பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேற்குப்புறப் பகுதியில் 2.00 லட்சம் காலன்களும் (9.00 லட்சம் லிட்டர்) கிழக்குப்புறப் பகுதியில் 1.50 லட்சம் காலன்களும் (7.00 லட்சம் லிட்டர்) கொள்ளளவு உள்ள இரண்டு நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. மேற்குப்புற தொட்டிக்கு எல்லிசத்திரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. கிழக்குப்புற தொட்டிக்கு எல்லிச்சத்திரம் மற்றும் ஆனாங்கூர் தலைமை குடிநீர் இறைப்பு நிலையங்களிலிருந்து நீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. குடியிருப்பு உபயோகத்திற்கு 1000 லிட்டருக்கு ரூ.5.00 வீதம் குறைந்தபட்சம் ரூ.50/–ம், இதர உபயோகத்திற்கு 1000 லிட்டலுக்கு ரூ.12.50 வீதம் குறைந்த பட்சம் ரூ.125/–ம் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அறிக்கையாண்டில் குடியிருப்புகளுக்கு 322 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டன. அறிக்கையாண்டின் இறுதியில் இருந்து வீட்டிணைப்புகளின் எண்ணிக்கை 11874 ஆகும்.

## குடிநீர் அபிவிருத்தி திட்டம்

ரூ.955.00 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு டுபிட்கோ நிறுவனத்தால் 10.03.2007–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி முடிவுற்றது.

கீழ்கண்டவாறு நிதி ஆதாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விவரம் | (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரசு மான்யம் | 601.65 |
| 2 | வட்டியில்லா கடன்<br>(கடன் 7 ஆண்டுகளில் திருப்ப வேண்டும்) | 257.85 |
| 3 | நகராட்சி பங்கு தொகை | 95.50 |
| | **மொத்தம்** | **955.00** |

குடிநீர் பொது மக்களுக்கு காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், ஒருநாளுக்கு 54 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இதன்படி தினமும் ஒரு நபருக்கு 80 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## 2023–24–ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வரும் குடிநீர் பணிகளின் விபரம்

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| | 15–வது மத்திய நிதிக்குழு மானியம் 2022–2023 (Tied Grant) | |
| 1 | Providing PVC Pumping main at Erumanthangal Road in wd.no : 5 | 3.00 |
| 2 | Providing PVC distribution main at Indra Nagar Main Road 1, 2, 3, 4, 5 & cross street Kakuppam Areas in wd.no : 7 | 8.20 |
| 3 | Providing PVC distribution main at Mariyamman kovil street, Arignar anna 1st cross street, Arignar anna main street, Annai indira main street, Kamarajar street in wd.no : 32 | 5.00 |
| 4 | Providing new bore well at Gandhi nagar in wd.no : 34 | 3.60 |
| 5 | Supply and fixing of KINETIC AIR VALVE with BUTTERFLY VALVES at Ellischatram road pumping main line at various places in villupuram municipality | 14.80 |
| 6 | Providing new bore well at Ragavanpattai for 1.00 LL Capacity OHT and pipe line for murugan kovil street in wd.no : 37 | 3.74 |
| 7 | Providing PVC distribution main at Thirukuripu thondar nagar & cross street in wd. no : 06 | 9.00 |

| | குடிநீர் நிதி 2023-24 | |
|---|---|---|
| 8 | வார்டு எண்.32-ல் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு புதியதாக ஆழ்துளை- குழாய் கிணறு அமைக்கும் பணி | 3.40 |
| 9 | வார்டு எண்.39 JJ நகர் மற்றும் இந்திரா பிரியதர்ஷினி நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறுடன் கூடிய மினி டேங்க் 2 எண்ணிக்கை அமைக்கும் பணி | 4.80 |
| 10 | வார்டு எண்.2 மற்றும் 3 ரஹிம்சா லே அவுட் மற்றும் சித்தேரிக்கரை பகுதியில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 4.20 |
| 11 | வார்டு எண்.07 MDG நகர் பகுதிக்கு புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மினிபவர் பம்பு அமைக்கும் பணி | 2.50 |
| 12 | விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலகத்திற்கு 250 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO (Reverse Osmosis) Plant அமைக்கும் பணி | 1.50 |
| 13 | வார்டு எண்.17 தாமரைக்குளம் பகுதிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த PVC குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் **பணி** | 9.70 |

**10.3 தெரு விளக்குகள்**

அறிக்கை ஆண்டில் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த மின் விளக்குகளின் எண்ணிக்கை 8382.

| வ.எண். | வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 W LED (Conversion) | 4942 |
| 2 | 40 W LED | 82 |
| 3 | 120 W LED | 276 |
| 4 | 200 W LED | 25 |
| 5 | 25 W LED | 700 |
| 6 | 40 W LED | 2000 |
| 7 | 90 W LED | 120 |
| 8 | 72 W LED | 142 |
| 9 | 120 W LED | 95 |
| | **Total** | 8382 |

அறிக்கை ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.5,72,08,921/- தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் மின்கட்டணங்களுக்காக கடனுக்காக செலவு செய்யப்பட்டது. தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு நிரந்தர 4 மின் பணியாளர்கள் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**10.4 கட்டிடங்கள்**

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் யாவும் நல்ல முறையில் நகராட்சி நிதி நிலைக்கு ஏற்ப பராமரிக்கப்பட்டு வருகிறது. தேவையான பழுது பார்த்தல் வேலைகளும் அவ்வப்போது செய்யப்பட்டது.

<u>10.5 கிடங்கு கருவிகளும், தளவாடங்களும்</u>

1. பொதுப்பணி வேலைகளுக்காக தனியாக இந்நகராட்சியில் வாகனங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.
2. குடிநீர் உபயோகத்திற்காக 3 குடிநீர் லாரி பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் 1 எண்ணிக்கையில் உள்ளது.
3. பாதாள சாக்கடை பணிகளுக்காக JET Rodding வாகனம் 2 எண்ணிக்கையில் உள்ளது.
4. JCB வாகனம் 2 எண்ணிக்கையில் உள்ளது.
5. தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் 1 எண்ணிக்கையில் உள்ளது.

<u>10.6 பொது நூலகம் (ம) அறிவுசார் மையம்</u>

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22–ன் கீழ் விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்பெரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.01.2024 அன்று காணொளியின் மூலம் திறந்து வைக்கப்பட்டது. இதனால் விழுப்புரம் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள ஊரக பகுதியிலுள்ள படித்த இளைஞர்கள் போட்டி தேர்வுக்கு தயார் செய்யவும், பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக உள்ளது.

இக்கட்டிடத்தில் பொதுவாசிப்பு பகுதி, CCTV கட்டுப்பாட்டு அறை, சேமிப்பு அறை, ஆண்கள் பொதுவாசிப்பு பகுதி, குழந்தைகளுக்கான செயல்பாட்டு பகுதி, ஸ்மார்ட் வகுப்பு பயிற்சி அறை – 2 எண்ணிக்கை, Wifi வசதியுடன் கூடிய கணினி 15–எண்ணிக்கை மற்றும் 2382 எண்ணிக்கையிலான புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தினமும் விழுப்புரம் நூலக அறிவு சார் மையத்தில் சராசரிகயாக 120 வாசகர்கள் இம்மையத்திற்கு வருகைபுரிந்து பயன்பெறுகிறார்கள். மேற்கண்ட 120 வாசர்களில் சுமார் 30 நபர்களுக்கு குறையாமல் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து வருகை தருகின்றனர். மேலும் இந்நூலகத்தில் பயின்று 50 மாணவர்கள் TNPSC Group IV தேர்வில் பங்கு பெற்றுள்ளனர்.

## 10.7 பூங்காக்கள்

பூங்கா தெருவில் உள்ள பூங்கா நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பூங்கா அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

| வ. எண். | விளையாடுமிடம் அமைவிடம் | நகரளவு எண் மற்றும் பரப்பளவு விபரம் | |
|---|---|---|---|
| 1 | நகராட்சி காமராஜர் மேல்நிலைப்பள்ளி | வார்டு எண் 07<br>பிளாக் எண் – 47<br>டி.எஸ். எண். 41 | (15.72 ஏக்கர்)<br>ஹெக்டேர் 6<br>சதுர மீட்டர்<br>3650 |

## 10.7(1) பழைய பேருந்து நிலையம் – அம்மா பூங்கா

பழைய பேருந்து நிலையம் அருகில் "அம்மா பூங்கா" என பெயர் சூட்டப்பட்டு குளத்துடன் கூடிய பூங்காவாக செயல்பட்டு வருகிறது. இதனால் கிராமத்திலிருந்து நகராத்திற்கு வந்து செல்லும் பயனாளிகள் மற்றும் உள்ளூர் பயனாளிகளும் அனைவரும் பயன்பெற்று வருகின்றனர்.

## 10.7(2) பூங்கா மேம்படுத்தும் பணிகள்

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22–ன் கீழ் ரூ.53.00 இலட்சம் மதிப்பீட்டில் சுபிக்ஷா கார்டன் பூங்காவினை புதிய பசுமை பூங்காவாகவும், காமதேனு நகர் பூங்காவினை ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23–ன் கீழ் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 28590 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பூங்காவிற்கு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சிறுவர்களுக்கான விளையாட்டு கருவிகள், உபகரணங்கள், கூடைப்பந்து, இறகு பந்து மைதானம் மற்றும் நீரூற்றுகள், LED விளக்குகள் உடற்பயிற்சிக்கான கருவிகள், நடைபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இப்பூங்காவிற்கு தினசரி விழுப்புரம் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சிக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

## 10.8 பொது வானொலி

இந்நகராட்சி பூங்காவில் வானொலிப் பெட்டி ஏதும் இயங்கப்படவில்லை. அதனால் செலவினம் ஏதும் இல்லை.

## 10.8 ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்

திட்டத்தின் நோக்கம் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு முக்கியமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஒரே இடத்தில் குளியலறை, கழிவறை, துவைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் அமைத்து கொடுத்தல். பொது இடங்களில் மலம், சிறுநீர் கழிப்பறை தவிர்த்தல் மற்றும் சுற்றுப்பற சுகாதாரத்தினை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் இரண்டு சுகாதார வளாகம் கீழ்கண்ட இடங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மகளிர் சுயநிதி உதவிக் குழுக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. அருந்ததியர் தெரு.
2. இராஜீவ்காந்தி நகர்.
3. மாம்பழப்பட்டு ரோடு.

**43. பாலங்கள்**

நகர எல்லைக்குள் இருப்பு பாதைகளின் மீது பண்டிட் ஜவஹர்லால் நேருசாலையில் ஒரு மேம்பாலம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஒரு மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இது தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பாலம் 1990 – 1991–ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நகர எல்லைக்குள் மேடைப் பாதைகள் மதகுகள் கிடையாது.

**ஆணையாளர்,**
**விழுப்புரம் நகராட்சி.**